A

# ஆண்டுப் பொதுத் தேர்வு - மாதிரி வினாத்தாள் - மார்ச்- 2023

## 11 - ஆம் வகுப்பு - கணக்குப்பதிவியல்

நேரம் : 15 நிமிடங்கள் + 3.00 மணி    மதிப்பெண் : 90

### பகுதி ---- I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.    20 × 1 = 20

1. நிலைச் சொத்துக்கள் கடனுக்கு வாங்கியது பதிவு செய்ய வேண்டிய ஏடு
   அ) கொள்முதல் ஏடு   ஆ) விற்பனை ஏடு   இ) கொள்முதல் திருப்ப ஏடு   ஈ) உரிய குறிப்பேடு
2. வெளியீட்டு சாதனத்திற்கான ஒரு உதாரணம்
   அ) சுட்டி   ஆ) அச்சுப்பொறி   இ) ஒளியியல் வருடி   ஈ) விசைப் பலகை
3. திரையரங்கத்தின் இருக்கை வசதிகளை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள்
   அ) முதலினச் செலவு   ஆ) வருவாயினச் செலவு
   இ) நீள்பயன் வருவாயினச் செலவு   ஈ) மேற்கூறிய எதுவுமில்லை
4. பேரேட்டுக் கணக்குகளை தயாரித்து முடித்தவுடன் அடுத்து தயாரிக்கப்படுவது
   அ) வியாபாரக்கணக்கு   ஆ) இருப்பாய்வு   இ) குறிப்பேடு   ஈ) இலாப நட்டக் கணக்கு
5. நேர்க்கோட்டு முறையில் தேய்மானத் தொகையானது,
   அ) ஆண்டுதோறும் அதிகரிக்கும்   ஆ) ஆண்டுதோறும் குறையும்
   இ) அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும்   ஈ) ஆண்டுதோறும் மாறக்கூடியது
6. சொத்து கணக்கு கையாள்வது
   அ) தனிப்பட்ட நபர்கள்   ஆ) செலவுகள் மற்றும் இழப்புகள்
   இ) சொத்துகள்   ஈ) வருமானம் மற்றும் இலாபங்கள்
7. நற்பெயர் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது?
   அ) ஓர் நடப்புச் சொத்து   ஆ) ஓர் நீர்மைச் சொத்து
   இ) புலனாகும் சொத்து   ஈ) புலனாகாச் சொத்து
8. தேய்மானம் எதனால் ஏற்படுகிறது?
   அ) காலப்போக்கு   ஆ) பயன்பாடு   இ) வழக்கொழிவு   ஈ) அ, ஆ மற்றும் இ
9. வணிகம் நீண்டகாலம் தொடர்ச்சியாக நடைபெறும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டது
   அ) வணிக தனித்தன்மை கருத்து   ஆ) நிறுவன தொடர்ச்சி கருத்து
   இ) கணக்கியல் கால அனுமானம்   ஈ) முன்னெச்சரிக்கை கொள்கை
10. Tally என்பது இதற்கு உதாரணமாக இருக்கிறது.
    அ) உருவாக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்
    ஆ) ஆயத்த கணக்கியல் மென்பொருள்
    இ) உள்கட்டமைக்கப்பட்ட மென்பொருள்
    ஈ) திருத்தியமைக்கப்பட்ட கணக்கியல் மென்பொருள்



11. பொருத்துக
    (1) சொத்து - (i) கூலி கொடுத்தது
    (2) பொறுப்பு - (ii) வாடகை பெற்றது
    (3) வருவாய் - (iii) வங்கி மேல்வரைப்பற்று
    (4) செலவு - (iv) பற்பல கடனாளிகள்
    குறியீடுகள்:

| | (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|---|
| அ | (iv) | (i) | (ii) | (iii) |
| ஆ | (iv) | (iii) | (ii) | (i) |
| இ | (iii) | (iv) | (i) | (ii) |
| ஈ | (ii) | (iii) | (iv) | (i) |

12. ஒரு இருப்பாய்வு தயாரிக்கப்படுவது
    அ) ஆண்டு இறுதியில்   ஆ) ஒரு குறிப்பிட்ட நாளில்
    இ) ஒரு பருவகாலம் முடிந்ததும்   ஈ) இவை ஏதும் இல்லை
13. இருப்பாய்வைப் பாதிக்காத பிழைகள்
    அ) விதிப்பிழைகள்   ஆ) அதிகமாகக் கூட்டுதல் பிழைகள்
    இ) குறைவாகக் கூட்டுதல் பிழைகள்   ஈ) பகுதி விடு பிழைகள்
14. நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
    அ) சமூகக் கணக்கியல்   ஆ) காரியதரிசிகளின் கணக்கியல்
    இ) மேலாண்மைக் கணக்கியல்   ஈ) பொறுப்பு கணக்கியல்
15. இரட்டைப்பதிவு முறையில் கணக்குகளைப் பதிவு செய்யும் போது நடவடிக்கைகள் பாதிப்பது
    அ) குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள்   ஆ) ஒரேகணக்கில், வெவ்வேறு தேதிகளில்
    இ) ஒரேகணக்கின் இரு பக்கங்களில்   ஈ) குறைந்தபட்சம் மூன்று கணக்குகள்
16. பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
    அ) கூட்டுதல்   ஆ) எடுத்தெழுதுதல்   இ) குறிப்பேட்டில் பதிதல்   ஈ) இருப்புக் கட்டுதல்
17. ரொக்க ஏடு ஒரு
    அ) துணை ஏடு   ஆ) முதன்மைஏடு
    இ) உரிய குறிப்பேடு   ஈ) துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும்
18. இறுதி சரக்கிருப்பு, அடக்கவிலை அல்லது விற்று ஈட்டக்கூடிய மதிப்பு இதில் எது குறைவோ அதனடிப்படையில் மதிப்பிடப்படும் என்ற கணக்கியல் கோட்பாடு
    அ) முக்கியத்துவ மரபு   ஆ) பண மதிப்பீட்டுக் கருத்து
    இ) முன்னெச்சரிக்கை மரபு   ஈ) நிகழ்வு தீர்வு / கருத்து
19. நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
    அ) கடனீந்தோர்   ஆ) பணியாளர்
    இ) வாடிக்கையாளர்   ஈ) அரசு



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

20. வங்கிச்சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதில் உதவுவது

அ) வங்கி அறிக்கை ஆ) ரொக்க ஏடு

இ) வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி ஈ) சில்லறை ரொக்க ஏடு

## பகுதி --- II

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 2 = 14$

21. கணக்கியலை வரையறு

22. வரவு இருப்பு என்றால் என்ன?

23. விதிப்பிழை என்றால் என்ன?

24. தேய்மானம் என்றால் என்ன?

25. ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயரைக் குறிப்பிடவும்

26. பின்வரும் குறிப்பேட்டுப் பதிவுக்கான விளக்கக் குறிப்பு தருக.

குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2022 ஏப்.1 | ரொக்க க/கு ப<br>பெற்ற கழிவு க/கு<br>( ------------------------------------------ ) | | 2,000 | 2,000 |
| 5 | A நிறுவன க/கு ப<br>விற்பனை க/கு<br>(---------------------------------------- ) | | 5,000 | 5,000 |

27. 2018, ஜனவரி 1 அன்று வினோத் என்பவரின் ஏடுகளில் கீழ்க்கண்ட இருப்புகள் காணப்பட்டன. **சொத்துகள்**: ரொக்கம் ₹. 40,000 ; சரக்கிருப்பு ₹. 50,000 ; ராம் என்பவரிடமிருந்து பெறவேண்டியது ₹.20,000; இயந்திரம் ₹.40,000;
**பொறுப்புகள்** : விஜய் என்பவருக்கு செலுத்தவேண்டியது ₹.10,000; தொடக்கப் பதிவினைத் தருக.

28. ஒரு நிறுவனம் ₹. 40,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. நிறுவுதல் செலவாக ₹. 2,000 மேற்கொண்டது. இயந்திரத்தின் எதிர்நோக்கும் பயனளிப்பு காலம் 5 ஆண்டுகள். நேர்க்கோட்டு முறையில் ஆண்டுத் தேய்மானத் தொகையை கணக்கிடுக

29. பின்வரும் விவரங்களிலிருந்து பிரகதீஷ் என்பவரின் 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| முதல் | 80,000 | கைரொக்கம் | 20,000 |
| கடனாளிகள் | 12,800 | நிகர இலாபம் | 4,800 |
| எடுப்புகள் | 8,800 | இயந்திரம் | 43,200 |

30. இருபத்தி ரொக்க ஏட்டின் படிவம் தருக



## பகுதி - III

**எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 40 - க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** $7 \times 3 = 21$

31. குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக. ( ஏதேனும் மூன்று )

32. வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.

33. எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக

34. இருப்பாய்வு தயாரிக்கப்பட வேண்டி உள்ளது எனக் கருதி கீழ்க்கண்ட பிழைகளைத் திருத்தம் செய்யவும்.

(அ) விற்பனை ஏட்டில் ₹. 400 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

(ஆ) கொள்முதல் ஏட்டில் ₹. 600 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு ஏட்டில் ₹. 800 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளது

35. பின்வரும் நடவடிக்கைகளை 2018 ஜூன் மாதத்திற்கான அரசன் மோட்டார் உதிரிபாகங்கள் விற்பனையாளர் அவர்களின் கொள்முதல் ஏட்டில் பதிவு செய்க.

| 2018 | | | ₹. |
|---|---|---|---|
| ஜூன் | 1 | கோவிந்தனமிடமிருந்து சரக்கு கடனுக்கு வாங்கியது | 25,000 |
| | 4 | கமலாவிடமிருந்து ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 27,000 |
| | 15 | ராமுவிடமிருந்து கடனுக்கு வாங்கியது | 15,000 |

36. இரட்டைப் பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக

37. 2017, மே மாதத்திற்கான சேஷாத்ரி அவர்களின் பின்வரும் நடவடிக்கைகளை தனிப்பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

| மே | | ₹. |
|---|---|---|
| 1 | கையிருப்பு ரொக்கம் | 40,000 |
| 5 | ஸ்வாதியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 4,000 |
| 7 | கூலி ரொக்கமாகக் கொடுத்தது | 2,000 |
| 10 | சசிகலாவிடமிருந்து ரொக்கத்திற்கு கொள்முதல் செய்தது | 6,000 |
| 15 | ரொக்கத்திற்கு விற்பனை செய்தது | 9,000 |
| 17 | கணிப்பொறி வாங்கியது | 15,000 |
| 22 | சபாபதிக்கு ரொக்கம் செலுத்தியது | 5,000 |
| 28 | சம்பளம் கொடுத்தது | 2,500 |
| 30 | வட்டிப்பெற்றது | 500 |

38. ஜுலை 1, 2016 அன்று, அறைகலன் ₹.1,00,000 க்கு வாங்கப்பட்டது. அதன் வாழ்நாள் 5 ஆண்டுகள். 5 ஆண்டுகள் முடிவில் அதன் இறுதி மதிப்பு ₹. 10,000. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க.



www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

39. சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ம் ஆண்டிற்கான வியாபாரக்கணக்கினை தயாரிக்கவும்.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 570 | கொள்முதல் | 15,800 |
| விற்பனை | 26,200 | கொள்முதல் திருப்பம் | 90 |
| விற்பனைத் திருப்பம் | 60 | இறுதி சரக்கிருப்பு | 860 |

40. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 × 5 = 35

41. (அ) கீழ்காணும் தகவல்களிலிருந்து ராமசுந்தரி என்பவரின் ஏடுகளில் 2017, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டிற்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும் அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயாரிக்க.

| விவரம் | தொகை (₹) | விவரம் | தொகை (₹) |
|---|---|---|---|
| தொடக்கச் சரக்கிருப்பு | 2,500 | விற்பனை | 7,000 |
| கூலி | 2,700 | கொள்முதல் | 3,300 |
| இறுதிச் சரக்கிருப்பு | 4,000 | சம்பளம் | 2,600 |
| பெற்ற தள்ளுபடி | 2,500 | முதல் | 52,000 |
| இயந்திரம் | 52,000 | வங்கி ரொக்கம் | 6,400 |
| கடனீந்தோர் | 8,000 | | |

( அல்லது )

(ஆ) பின்வரும் நடவடிக்கைளை பொன்னியின் விற்பனை ஏடு மற்றும் விற்பனைத் திருப்ப ஏட்டில் பதிவுசெய்யவும்

2017

ஆகஸ்டு 1 இடாப்பு எண் 68 ன் படி, செந்திலுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 20,500

ஆகஸ்டு 4 இடாப்பு எண் 74 ன் படி, மாதவனுக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 12,800

ஆகஸ்டு 7 இடாப்பு எண் 78 ன் படி, கனகசபைக்கு கடனுக்கு சரக்கு விற்றது ₹. 7,500

ஆகஸ்டு 15 வரவுக்குறிப்பு 7 ன் படி, செந்தில் திருப்பிய சரக்கு மதிப்பு₹. 1,500 - க்கு ரொக்கம் அளிக்கப்படவில்லை

ஆகஸ்டு 20 செல்வத்திடம் ரொக்கத்திற்கு சரக்கு விற்றது ₹. 13,300

ஆகஸ்டு 25 வரவுக்குறிப்பு 11 ன் படி மாதவன் திருப்பிய சரக்கு ₹. 1,800 - க்கு ரொக்கம் செலுத்தப்படவில்லை

42. அ) முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும்

( அல்லது )

ஆ) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?



43. (அ) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் மனோகர் அவர்களின் குறிப்பேடுகளில் பதிவு செய்க

| 2018 மார்ச் | | ₹. |
|---|---|---|
| 1 | மனோகர் வியாபாரம் தொடங்க கொண்டு வந்த ரொக்கம் | 60,000 |
| 2 | ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது | 10,000 |
| 3 | ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது | 25,000 |
| 6 | கமலேசிடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது | 15,000 |
| 8 | ரொக்கத்திற்கு சரக்கு விற்பனை செய்தது | 28,000 |
| 10 | ஹரிக்கு கடனுக்கு சரக்கு விற்பனை செய்தது | 10,000 |
| 14 | கமலேசிற்கு செலுத்திய ரொக்கம் | 12,000 |
| 18 | வாடகை செலுத்தியது | 500 |
| 25 | ஹரியிடமிருந்து பெற்ற ரொக்கம் | 8,000 |
| 28 | சொந்தப் பயன்பாட்டிற்காக பணம் எடுத்தது | 4,000 |

( அல்லது )

(ஆ) சந்திரமோகன் என்பவரது ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்காணும் இருப்புகளைக் கொண்டு 31. 3. 2017 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயார் செய்க.

| கணக்கின் பெயர் | தொகை ₹ | கணக்கின் பெயர் | தொகை ₹ |
|---|---|---|---|
| முதல் | 1,24,500 | வங்கி மேல்வரைப்பற்று | 5,800 |
| எடுப்புகள் | 2,000 | மகிழ்வுந்து | 20,000 |
| பெற்ற கடன் | 7,000 | பொதுச் செலவுகள் | 2,500 |
| விற்பனை | 53,400 | கட்டடம் | 1,10,000 |
| கொள்முதல் | 40,000 | சரக்கிருப்பு | 16,200 |

44. (அ) குறிப்பேட்டுப் பதிவுகளைத் தந்து, ரொக்க கணக்கில் எடுத்து எழுதுக.

| 2022 | | ₹ |
|---|---|---|
| ஜூன் 1 | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | 1,10,000 |
| 10 | கூடுதல் முதல் இட்டது | 50,000 |
| 28 | சொந்தசெலவுக்கு ரொக்கம் எடுத்துக் கொண்டது | 20,000 |

( அல்லது )

(ஆ) கீழ்க்காணும் சரிக்கட்டுதல்களுக்குத் தேவையான சரிக்கட்டுப் பதிவுகள் தரவும்.

(அ) இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ₹. 5,000

(ஆ) கொடுபட வேண்டிய சம்பளம் ₹. 150

(இ) காப்பீடு முன்கூட்டிச் செலுத்தியது ₹. 450

(ஈ) முன்கூட்டிப் பெற்ற கழிவு ₹. 20,000

(உ) முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ₹. 1,000



www.Padasalai.Net

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

45. (அ) ஜனவரி 1, 2015 அன்று வெளிநாட்டிலிருந்து கொதிகலன் ஒன்று ₹. 10,000 க்கு வாங்கப்பட்டது. கப்பல் ஏற்றுக் கட்டணம் ₹. 2,000, இறக்குமதி வரி ₹. 7,000 மற்றும் நிறுவுதல் செலவிற்காக ₹. 1,000 செலவிடப்பட்டது. குறைந்து செல் இருப்பு முறையில் ஆண்டுக்கு 10% தேய்மானம் எனக் கொண்டு முதல் மூன்று ஆண்டுகளுக்கு தேய்மானத் தொகை கணக்கிடவும். கணக்குகள் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் 31 ல் முடிக்கப்பெறுகின்றன.

( அல்லது )

(ஆ) கீழ்க்கண்டவற்றை முதலினம் அல்லது வருவாயினம் என வகைப்படுத்தவும்.

(i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹. 10,000.
(ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹. 5,000.
(iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹. 2,000.
(iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹. 3,000.
(v) ஆலை வாடகைச் செலுத்தியது ₹. 12,000

46. (அ) பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு 2017 ஏப்ரல் மாதத்திற்கான சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு மற்றும் விற்பனை ஏடு தயார் செய்க.

2017

ஏப்ரல் 1 காஞ்சிபுரம் பிரசாத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வங்கியது
ஒரு மீட்டர் ₹. 450 வீதம் 100 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹.180 வீதம் 75 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 10 சென்னை இரத்தினத்திற்கு கடனுக்கு சரக்கு விற்றது
ஒரு மீட்டர் ₹.490 வீதம் 60 மீட்டர் சில்க் துணி
ஒரு மீட்டர் ₹. 210 விதம் 50 மீட்டர் வெல்வெட் துணி

ஏப்ரல் 18 நாதன் நிறுவனத்திடமிருந்து கடனுக்கு வாங்கியது
ஒரு மீட்டர் ₹. 510 வீதம் 100 மீட்டர் சில்க் துணி

ஏப்ரல் 20 மதுரை, ஹரிராம் துணியகத்திடமிருந்து கடனுக்கு சரக்கு வாங்கியது
கட்டு ஒன்று ₹. 730 வீதம் 50 கட்டுகள் காடாத் துணி
கட்டு ஒன்று ₹. 650 வீதம் 80 கட்டுகள் காலிக்கோ துணி

ஏப்ரல் 24 கரூர், மோகனிடமிருந்து ரொக்கத்திற்கு வாங்கியது
சட்டைத் துணிகள் மதிப்பு ₹. 7,000
சேலைகள் மதிப்பு₹. 25,000

( அல்லது )

(ஆ) பின்வரும் நடவடிக்கைகளின் கணக்கியல் சமன்பாட்டினை தயார் செய்க.

(அ) முருகன் ₹. 80,000 பணத்துடன் தொழிலைத் தொடங்கினார்.
(ஆ) ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது ₹. 30,000.
(இ) ரொக்கமாக வழங்கிய சம்பளம் ₹. 5,000.
(ஈ) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு, பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ₹.5,000.
(உ) கூடுதல் முதல் இட்டது ₹.10,000



47. (அ) கல்யாணசுந்தரம் என்பவரின் முப்பத்தி ரொக்க ஏட்டில் கீழ்க்கண்ட நடவடிக்கைகளைப் பதிவு செய்க.

| 2017 ஜன. | | ₹ |
|---|---|---|
| 1 | ரொக்க இருப்பு | 42,500 |
| | வங்கி இருப்பு | 35,000 |
| 3 | ரொக்க விற்பனை மூலம் பெற்ற தொகை | 15,700 |
| 4 | வங்கியில் ரொக்கம் செலுத்தியது | 11,500 |
| 6 | ரொக்கக் கொள்முதல் | 14,300 |
| 9 | மின்னணு தீர்வை முறையில் வங்கி நேரடியாக பங்காதாயம் பெற்றது | 2,000 |
| 10 | பொங்கல் முன்பணம் பணியாளர்களுக்கு வங்கி மூலம் செலுத்தியது | 17,000 |
| 12 | நாகராஜனிடமிருந்து ரொக்கம் பெற்றது | 11,850 |
| | அவருக்கு அளித்த தள்ளுபடி | 150 |
| 17 | மகேஷுக்கு கொடுக்க வேண்டிய ₹. 20,000 - த்தில் ₹. 19,700 செலுத்தி அவர் கணக்கு தீர்க்கப்பட்டது | |
| 20 | சொந்த செலவுகளுக்காகப் பணம் எடுத்துக் கொண்டது | 20,000 |
| 30 | தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்தின் மூலம் அலுவலக செலவுகளுக்காகப் பணம் எடுத்தது | 1,500 |

( அல்லது )

(ஆ) பின்வரும் விவரங்களிலிருந்து, அர்ச்சனாவின் 2016, டிசம்பர் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வியாபார கணக்கைத் தயாரிக்கவும்.

| பற்றிருப்பு | தொகை (₹) | வரவிருப்பு | தொகை (₹) |
|---|---|---|---|
| சரக்கிருப்பு | 80,000 | கொள்முதல் திருப்பம் | 10,000 |
| கொள்முதல் | 8,60,000 | விற்பனை திருப்பம் | 3,16,000 |
| உள் ஏற்றிச்செல் செலவு | 52,000 | கொள்முதல் மீதான இறக்குமதி வரி | 30,000 |
| கூலி | 24,000 | விற்பனை | 14,40,000 |

<u>சரிகட்டுதல்கள்</u>

1) இறுதிச் சரக்கிருப்பு ₹. 1,00,000
2) கொடுபட வேண்டிய கூலி ₹. 12,000
3) உள் ஏற்றிச்செல் செலவு முன்கூட்டிச் செலுத்தியது ₹. 5,000



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

## விடை குறிப்பு ஆண்டுப் பொதுத் தேர்வு - மாதிரி வினாத்தாள் - மார்ச்- 2023

### 11 - ஆம் வகுப்பு - கணக்குப்பதிவியல்

| A TYPE | | | B TYPE | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஈ | உரிய குறிப்பேடு | 1 | ஈ | அ, ஆ மற்றும் இ |
| 2 | ஆ | அச்சுப்பொறி | 2 | அ | விதிப்பிழைகள் |
| 3 | அ | முதலினச் செலவு | 3 | இ | வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி |
| 4 | ஆ | இருப்பாய்வு | 4 | ஆ | (iv) , (iii) , (ii), (i) |
| 5 | இ | அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும் | 5 | ஆ | காரியதரிசிகளின் கணக்கியல் |
| 6 | இ | சொத்துகள் | 6 | ஈ | உரிய குறிப்பேடு |
| 7 | ஈ | புலனாகாச் சொத்து | 7 | இ | அனைத்து ஆண்டுகளுக்கும் நிலையாக இருக்கும் |
| 8 | ஈ | அ, ஆ மற்றும் இ | 8 | ஆ | இருப்பாய்வு |
| 9 | ஆ | நிறுவன தொடர்ச்சி கருத்து | 9 | ஆ | எடுத்தெழுதுதல் |
| 10 | ஆ | ஆயத்த கணக்கியல் மென்பொருள் | 10 | ஆ | ஒரு குறிப்பிட்ட நாளில் |
| 11 | ஆ | (iv) , (iii) , (ii), (i) | 11 | ஈ | துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும் |
| 12 | ஆ | ஒரு குறிப்பிட்ட நாளில் | 12 | ஆ | அச்சுப்பொறி |
| 13 | அ | விதிப்பிழைகள் | 13 | இ | முன்னெச்சரிக்கை மரபு |
| 14 | ஆ | காரியதரிசிகளின் கணக்கியல் | 14 | இ | சொத்துகள் |
| 15 | அ | குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் | 15 | ஆ | பணியாளர் |
| 16 | ஆ | எடுத்தெழுதுதல் | 16 | ஆ | நிறுவன தொடர்ச்சி கருத்து |
| 17 | ஈ | துணையேடு மற்றும் முதன்மை ஏடு இரண்டும் | 17 | அ | முதலினச் செலவு |
| 18 | இ | முன்னெச்சரிக்கை மரபு | 18 | ஈ | புலனாகாச் சொத்து |
| 19 | ஆ | பணியாளர் | 19 | ஆ | ஆயத்த கணக்கியல் மென்பொருள் |
| 20 | இ | வங்கி அறிக்கை மற்றும் ரொக்க ஏட்டின் வங்கி பத்தி | 20 | அ | குறைந்தபட்சம் இரண்டு கணக்குகள் |

## பகுதி - II

**21. கணக்கியலை வரையறு.**

- அமெரிக்ககணக்கியல் கழகத்தின் கூற்றின்படி, "கணக்கியல் என்பது பொருளாதார தகவல்களைக் கண்டறிந்து, அளவிட்டு, தகவல் தெரிவிக்கக்கூடிய ஒரு செயல்பாடாகும். இதன்மூலம், தகவல்களைப் பயன்படுத்துவோர் தக்கதீர்வு காண்பதற்கும் மற்றும் முடிவெடுப்பதற்கும் வகை செய்கிறது".

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

22. **வரவு இருப்பு என்றால் என்ன?**

- பற்று பக்கத்தின் மொத்தத்தை விட, வரவு பக்கத்தின் மொத்தம் அதிகமாக இருப்பின் அந்த இருப்பு, வரவு இருப்பு எனப்படும்.

23. **விதிப்பிழை என்றால் என்ன?**

- நடவடிக்கைகளை கணக்கு ஏடுகளில் பதிவு செய்யும் போது, அடிப்படைக் கணக்கியல் விதிகளை தவறாக பின்பற்றுவதால் ஏற்படும் பிழையே விதிப்பிழை எனப்படும்.

24. **தேய்மானம் என்றால் என்ன?**

- நிலைச் சொத்தின் அடக்க விலையை, அதனுடைய பயனளிப்புக்காலத்திற்கு ஒதுக்கீடு செய்யும் செயல்முறை தேய்மானம் ஆகும்.

( அல்லது )

- தேய்மானம் என்பது எக்காரணத்தினாலும், ஒரு சொத்தின் மதிப்பில் உண்டாகும் படிப்படியான மற்றும் நிலையான குறைவே ஆகும்."

25. **ஏதேனும் இரண்டு கணக்கியல் தொகுப்பின் பெயரைக் குறிப்பிடவும்.**

1. ஆயத்த மென்பொருள்
2. திருத்தியமைக்கப்பட்ட மென்பொருள்
3. உருவாக்கப்பட்ட மென்பொருள்

26. 1) கழிவு பெற்றது
2) கடன் விற்பனை செய்தது

27. **விநோத்தின் தொடக்கப் பதிவு**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 ஜனவரி 1 | ரொக்கம் க/கு ப | | 40,000 | |
| | சரக்கிருப்பு க/கு ப | | 50,000 | |
| | கடனாளிகள் க/கு (ராம் க/கு) ப | | 20,000 | |
| | இயந்திரம் க/கு ப | | 40,000 | |
| | விஜய் க/கு (கடனீந்தோர் ) | | | 10,000 |
| | விநோத் முதல் க/கு (சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கொணரப்பட்டது) | | | 1,40,000 |

28. சொத்தின் ஆரம்ப அடக்கவிலை = வாங்கிய விலை + நிறுவகைச் செலவுகள்

= ₹. 40,000 + ₹. 2,000 = ₹. 42,000

$$\text{ஆண்டு தேய்மானத் தொகை} = \frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை} - \text{எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$$

$$= \frac{42{,}000-0}{5} = \frac{42{,}000}{5} = ₹.\ 8{,}400$$

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

29. **பிரகதீஷ் என்பவரின் 2017, டிசம்பர் 31 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு**

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் | 80,000 | | கடனாளிகள் | | 12,800 |
| கூட்டுக :நிகர இலாபம் | 4,800 | | கை ரொக்கம் | | 20,000 |
| | 84,800 | | | | |
| கழிக்க : எடுப்புகள் | 8,800 | 76,000 | இயந்திரம் | | 43,200 |
| | | 76,000 | | | 76,000 |

30. **இருபத்தி ரொக்க ஏட்டின் படிவம்**

" ------------ " அவர்களின் இருபத்தி ரொக்க ஏடு

ப வ

| நாள் | பெறுதல் கள் | இ. எ | பே.ப .எ ண் | தொகை ₹ | | நாள் | செலுத்தல் கள் | சா. சீ. எ | பே. ப. எ | தொகை ₹ | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தள்ளுபடி | ரொக்கம் | | | | | தள்ளு படி | ரொக்க ம் |

**பகுதி – III**

31. **குறிப்பேட்டினை பேரேட்டுடன் வேறுபடுத்துக.**

| அடிப்படை | குறிப்பேடு | பேரேடு |
|---|---|---|
| 1. பதிவு செய்தல் | நடவடிக்கை நிகழ்ந்தவுடன் இதில் பதிவு செய்யப்படும் | குறிப்பேடு தயாரித்த அதே நாளில் அல்லது துணை ஏடுகள் பராமரித்து வந்தால், ஒரு குறிப்பிட்ட காலத்தின் இறுதியில் அதாவது வாரத்தின் கடைசி நாள் அல்லது இரு வாரங்களுக்கு ஒருமுறை இதில் எடுத்தெழுதப்படும் |
| 2. பதிவு செய்யும் நிலை | பதிவு செய்வது முதல் நிலையாகும் | குறிப்பேட்டில் பதிந்த பிறகு பேரேடு தயாரிப்பதால், இது இரண்டாவது நிலையாகும. |
| 3. பதிவு செய்யும் வரிசை | நடவடிக்கைகள் நிகழ்ந்த வரிசைப்படி அதாவது, நடவடிக்கைகள் நிகழ்ந்த நாளின் படி பதிவு செய்யப்படுகிறது | கணக்குகளின் வரிசைப்படி ,பதிவுகள் செய்யப்படுகின்றன. |
| 4. வழிமுறை | ஏடுகளில் பதிவு செய்வதை, குறிப்பேட்டில் பதிவு செய்தல் என்கிறோம். | பேரேட்டில் பதிவு செய்வதை, எடுத்தெழுதுதல் என்கிறோம். |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

| | | |
|---|---|---|
| 5. இருப்பாய்வு தயாரிக்க உதவுதல் | குறிப்பேட்டில் பதியப்பட்டுள்ள தொகைகளைக் கொண்டு இருப்பாய்வு தயாரிக்க இயலாது | பேரேட்டுக் கணக்குகளின் மூலம் கிடைக்கப் பெற்ற இருப்புகளே இருப்பாய்வு தயாரிக்க அடிப்படையாகிறது. |
| 6. பதிவிற்கான ஆதாரம் | ஆதாரஆவணங்களை அடிப்படையாகக் கொண்டு குறிப்பேட்டுப்பதிவுகள் செய்யப்படுகின்றன. | குறிப்பேட்டுப் பதிவுகளைக் கொண்டு பேரேடு தயாரிக்கப்படுகிறது. |
| 7. நிகர நிலை | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறிய முடியாது. | இதனைக் கொண்டு, ஒரு கணக்கின் நிகர நிலையினை அறியலாம். |

32. **வங்கிச் சரிகட்டும் பட்டியல் தயாரிப்பதற்கான மூன்று காரணங்களைத் தருக.**

1. ரொக்க ஏட்டின்படியான வங்கி இருப்பும், வங்கி அறிக்கையின் படியான வங்கி இருப்பும், வேறுபட்டிருப்பதற்கான காரணங்களை அடையாளம் காண,
2. காசோலைகள் தீர்வடைவதில் ஏற்படும் காலதாமதத்தை கண்டறிய,
3. ரொக்க ஏட்டின் வங்கி பத்தியின் சரியான இருப்பினை கணக்கிட,
4. வணிகத்தின் கணக்காளர்கள் மற்றும் வங்கி, நிதியினை தவறாக பயன்படுத்துவதை தடுக்க.

33. **எதிர்ப் பதிவை உதாரணத்துடன் விளக்குக.**

- ஒரு நடவடிக்கையில், ரொக்கம் மற்றும் வங்கி என்ற இரு கணக்குகளும் தொடர்பு பெற்றிருந்தால், அந் நடிவடிக்கையின் இரு தன்மைகளும் ரொக்க ஏட்டில் பதியப்படுகின்றன.
- அவ்வாறு ஒரு நடவடிக்கையின் பற்று மற்றும் வரவுத் தன்மைகள், ரொக்க ஏட்டில் பதியப்பட்டால், அது எதிர்ப்பதிவு எனப்படும்.

<u>உதாரணம்</u>

1. <u>வங்கியில் பணம் செலுத்தியது</u> :
   - இது ரொக்க ஏட்டில் பற்றுப் பக்கத்தில் உள்ள வங்கிப் பத்தியிலும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள ரொக்கப் பத்தியிலும் பதியப்படும்.
2. <u>வங்கியிலிருந்து அலுவலக செலவுகளுக்காக பணம் எடுத்தது</u> :
   - இது ரொக்க ஏட்டில் பற்றுப் பக்கத்தில் உள்ள ரொக்கப் பத்தியிலும் மற்றும் வரவுப் பக்கத்தில் உள்ள வங்கிப் பத்தியிலும் பதியப்படும்.

34.

(அ) விற்பனை கணக்கில் ₹. 400 வரவு வைக்க வேண்டும்.

(ஆ) கொள்முதல் கணக்கில் ₹. 600 பற்று வைக்க வேண்டும்.

(இ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கில் ₹. 800 பற்று வைக்க வேண்டும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

35.

**அரசன் மோட்டார் உதிரிபாக நிறுவனத்தின் ஏடுகளில்**

**கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே.ப.எ | தொகை | |
|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. |
| 2018 நவ 1<br>15 | கோவிந்தன்<br>ராமு | | | | 25,000<br>15,000 |
| | கொள்முதல் க/கு ப | | | | 40,000 |

36. **இரட்டைப்பதிவு கணக்கியல் முறையின் பொன்னான விதிகளைத் தருக.**

| | | |
|---|---|---|
| ஆள்சார் கணக்கு | பெறுபவரை பற்று செய்க | தருபவரை வரவு செய்க |
| சொத்து கணக்கு | உள்வருவதை பற்று செய்க | வெளிச் செல்வரை வரவு செய்க |
| பெயரளவு கணக்கு | அனைத்துச் செலவுகளையும், நட்டங்களையும் பற்று செய்க | அனைத்து வருமானங்களையும், ஆதாயங்களையும் வரவு செய்க |

37.

**சேஷாத்ரி என்பவரின் ஏடுகளில்**

ப **தனிப்பத்தி ரொக்க ஏடு** வ

| நாள் | பெறுதல்கள் | பே.ப. எண் | தொகை ₹. | நாள் | செலுத்தல்கள் | பே. ப.எண் | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2017 மே 1 | இருப்பு கீ/கொ | | 40,000 | 2017 மே 7 | கூலி க/கு | | 2,000 |
| 5 | ஸ்வாதி க/கு | | 4,000 | 10 | கொள்முதல் க/கு | | 6,000 |
| 15 | விற்பனை க/கு | | 9,000 | 18 | கணிப்பொறி க/கு | | 15,000 |
| 30 | வட்டி க/கு | | 500 | 22 | சபாபதி க/கு | | 5,000 |
| | | | | 28 | சம்பளம் க/கு | | 2,500 |
| | | | | 31 | இருப்பு கீ / இ | | 23,000 |
| | | | 53,500 | | | | 53,500 |
| ஜூன் 1 | இருப்பு கீ/கொ | | 23,000 | | | | |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

38. ஆண்டு தேய்மானத் தொகை = $\frac{\text{சொத்தின் ஆரம்ப அடக்க விலை – எதிர்நோக்கும் இறுதி மதிப்பு}}{\text{எதிர்நோக்கும் பயனளிப்பு காலம்}}$

$= \frac{1,00,000 - 10,000}{5} = \frac{90,000}{5}$

ஆண்டு தேய்மானத் தொகை = ₹. 18,000

தேய்மான விகிதம் = $\frac{\text{ஆண்டுத் தேய்மானத் தொகை}}{\text{ஆரம்ப அடக்கவிலை}} \times 100$

$= \frac{18,000}{1,00,000} \times 100 = 18\%$

39.

ப **சஞ்சயின் ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ம் ஆண்டிற்கான வியாபாரக் கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 570 | விற்பனை | 26,200 | |
| கொள்முதல் | 15,800 | | கழிக்க : விற்பனை திருப்பம் | 60 | 26,140 |
| கழிக்க: கொள்முதல் திருப்பம் | 90 | 15,710 | இறுதி சரக்கிருப்பு | | 860 |
| மொத்த இலாபம் கீ/இ | | 10,720 | | | |
| | | 27,000 | | | 27,000 |

40. முதலின வரவு மற்றும் வருவாயின வரவு வேறுபடுத்தவும்.

| வ.எண் | அடிப்படை | முதலின வரவு | வருவாயின வரவு |
|---|---|---|---|
| 1 | தன்மை | அடிக்கடி நிகழாதத் தனமையுடையது | அடிக்கடி நிகழும் தனமையுடையது |
| 2 | அளவு | பெரும்பாலும் பேரளவிலான தொகையாக இருக்கும் | சிறிய அளவிலான தொகையாக இருக்கும் |
| 3 | பகிர்வு | இத்தொகையை இலாபமாக கருதி பகிர்ந்தளிக்க முடியாது | வருவாயின செலவைக் காட்டிலும், மிகுதியான வருவாயின வரவுகள், இலாபமாகக் கருதிப் பகிர்ந்து அளிக்கப்படும் |

# பகுதி – IV

41. (அ)

ராமசுந்தரி ஏடுகளில் 31, டிசம்பர் 2017 ம் ஆண்டிற்கான

ப வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | | 2,500 | விற்பனை | | 7,000 |
| கொள்முதல் | | 3,300 | இறுதி சரக்கிருப்பு | | 4,000 |
| கூலி | | 2,700 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 2,500 | | | |
| | | 11,000 | | | 11,000 |
| சம்பளம் | | 2,600 | மொத்த இலாபம் கீ/கொ | | 2,500 |
| நிகர இலாபம் | | 2,400 | பெற்ற தள்ளுபடி | | 2,500 |
| | | 5,000 | | | 5,000 |

ராம சுந்தரி என்பவரின் 31, டிசம்பர் 2017 ஆம் நாளைய இருப்புநிலைக் குறிப்பு

| பொறுப்புகள் | தொகை ₹. | தொகை ₹. | சொத்துகள் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| முதல் | 52,000 | | இயந்திரம் | | 52,000 |
| கூட்டுக :நிகர இலாபம் | 2,400 | 54,400 | வங்கி ரொக்கம் | | 6,400 |
| கடனீந்தோர் | | 8,000 | இறுதிச் சரகிருப்பு | | 4,000 |
| | | 62,400 | | | 62,400 |

(அல்லது )

(ஆ)

## பொன்னியின் விற்பனை ஏடு

| நாள் | விவரம் | வெ.செ.இ.எ | பே.ப.எ | தொகை ( ₹ ) விளக்கம் | தொகை ( ₹ ) மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2017 ஆகஸ்1 | செந்தில் | 68 | | | 20,500 |
| 4 | மாதவன் | 74 | | | 12,800 |
| 7 | கனகசபை | 78 | | | 7,500 |
| | விற்பனை க/கு வ | | | | 40,800 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

**குறிப்பு** : ஆகஸ்டு 20 ஆம் தேதி நடவடிக்கை, ரொக்க நடவடிக்கை ஆதலால், இதில் பதியப்படவில்லை

**பொன்னியின் விற்பனை திருப்ப ஏடு**

| நாள் | விவரம் | வரவு குறிப்பு எண் | பே.ப.எ | தொகை | | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|
| | | | | விளக்கம் ₹. | மொத்தம் ₹. | |
| 2017 ஆகஸ்டு15 | செந்தில் | 7 | | | 1,500 | |
| 25 | மாதவன் | 11 | | | 1,800 | |
| | விற்பனை திருப்பம் க/கு ப | | | | 3,300 | |

42. அ) முதலினச் செலவு மற்றும் வருவாயினச் செலவு வேறுபடுத்தவும்.

| அடிபடை | முதலினச் செலவு | வருவாயினச் செலவு |
|---|---|---|
| தன்மை | அடிக்கடி நிகழாதத் தன்மையுடையது | அடிக்கடி நிகழும் தன்மை உடையது |
| நோக்கம் | வருவாய் ஈட்டும் திறனை அதிகரிப்பது | வியாபாரத்தின் அன்றாட செயல்பாடுகளை மேற்கொள்வது |
| பயனளிப்பு காலம் | இச் செலவின் பலன், நீண்ட காலத்திற்கு கிடைக்கும் | நடப்பு ஆண்டிற்கு மட்டுமே பலன் தரக்கூடியது |
| இலாபம் ஈட்டும் திறனில் ஏற்படுத்தும் விளைவு | இலாபம் ஈட்டும் திறனை அதிகரிக்கச் செய்யும். | இலாபம் ஈட்டும் திறனை, பராமரித்து வைத்துக் கொள்ள உதவும் |
| கணக்கியல் நடைமுறை | இருப்பு நிலைக் குறிப்பில் சொத்து பக்கத்தில் தோன்றும் | நேரடிச் செலவுகள் வியாபாரக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும், மறைமுகச் செலவுகள் இலாப நட்டக் கணக்கின் பற்றுப் பக்கத்திலும் தோன்றும் |

( அல்லது )

ஆ) தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?

1. **தேய்வு மற்றும் உராய்வு**
   - சாதாரணமாக புலனாகும் நிலைச் சொத்தை பயன்படுத்தும் போது, அதன் மதிப்பு குறைந்து கொண்டே செல்கிறது. அது தேய்வு மற்றும் உராய்வு என்று அழைக்கப்படுகிறது.
   - தேய்வு ஏற்படும்போது, நிலைச் சொத்தின் மதிப்பு விகிதாச் சாரப்படி குறைகிறது.
2. **காலப்போக்கு**
   - காலப்போக்கு காரணமாக, ஒரு சில சொத்துகளை பயன்படுத்தினாலும் அல்லது பயன்படுத்தாமல் இருந்தாலும், அவற்றின் பயன்பாட்டு நிலை குறையும்.

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

3. **வழக்கொழிவு**
   - ❖ நவீன பதிலி சொத்துகளின் வருகையால், சொத்துகளின் மதிப்பு குறைவது வழக்கொழிவு எனப்படும்.
   - ❖ புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் புதுமையான செயல்முறைகள் காரணமாக, இது ஏற்படுகிறது.

   உதாரணமாக, நவீன கால கணினிகள் பயன்பாட்டாளர்களால் விரும்பப்படுவது.
4. **நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருப்பது**
   - ❖ தேவைக்கான நோக்கத்திற்கு போதுமானதாக இல்லாமல் இருக்கும்போது, அச்சொத்தின் பயன்பாடு நிறுத்தப்படுகிறது.
   - ❖ நிறுவனத்தின் திறனை விரிவாக்கம் செய்யும் போது , இச்சொத்துகளின் திறன் போதுமானதாக இல்லாமல் போகலாம்.
5. **பராமரிப்பின்மை**
   - ❖ சொத்துகள் சரிவர பராமரிக்கப்படும் போது, அச்சொத்தின் வாழ்நாள் அதிகரிக்கிறது.
   - ❖ சொத்துகள் சரிவர பராமரிக்கப்படவில்லை என்றால், அதிக அளவு தேய்மானத்திற்கான வாய்ப்புகள் உண்டு.
6. **அசாதாரணமான காரணிகள்**
   - ❖ தீ விபத்து, இயற்கைச் சீற்றங்கள் போன்ற அசாதாரண காரணிகளால் ஏற்படக்கூடிய பாதிப்புகளில், நிலைச் சொத்தின் பயன்பாடு குறைந்து, நீக்கப்படும் நிலைக்கும் கொண்டு செல்லலாம்.

---

43. (அ) **மனோகரின் ஏடுகளில் குறிப்பேட்டுப் பதிவுகள்**

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2018 மார் 1 | ரொக்க க/கு ப<br>மனோகர் முதல் க/கு<br>( மனோகர் ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 60,000 | 60,000 |
| 2 | அறைகலன் க / கு ப<br>ரொக்க க / கு<br>( ரொக்கத்திற்கு அறைகலன் வாங்கியது ) | | 10,000 | 10,000 |
| 3 | கொள்முதல் க/கு ப<br>ரொக்க க/கு<br>( ரொக்கத்திற்கு சரக்கு வாங்கியது) | | 25,000 | 25,000 |
| 6 | கொள்முதல் க/கு ப<br>கமலேஸ் க/கு<br>( கடனுக்கு கொள்முதல் செய்தது ) | | 15,000 | 15,000 |
| 8 | ரொக்க க/கு ப<br>விற்பனை க/கு<br>( ரொக்கத்திற்கு விற்பனை செய்தது ) | | 28,000 | 28,000 |
| 10 | ஹரி க/கு ப<br>விற்பனை க/கு | | 10,000 | 10,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

| | | | | |
|---|---|---|---|---|
| | ( கடனுக்கு விற்பனை செய்தது ) | | | |
| 14 | கமலேஸ் க/கு ப<br>ரொக்க க/கு<br>( கமலேசுக்கு ரொக்கம் செலுத்தியது ) | | 12,000 | 12,000 |
| 18 | வாடகை க/கு ப<br>ரொக்க க/கு<br>( வாடகை செலுத்தியது ) | | 500 | 500 |
| 25 | ரொக்க க/கு ப<br>ஹரி க/கு<br>( ஹரியிடமிருந்து ரொக்கம் பெற்றது ) | | 8,000 | 8,000 |
| 28 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சொந்தப்பயனுக்கு ரொக்கம் எடுத்தது ) | | 4,000 | 4,000 |

(அல்லது )

(ஆ)

**சந்திரமோகன் ஏடுகளில் 31. 3. 2017 ஆம் நாளன்றைய இருப்பாய்வு**

| வ.எண் | கணக்கின் பெயர் | பே.ப. எண் | பற்று இருப்பு ₹. | வரவு இருப்பு ₹. |
|---|---|---|---|---|
| 1 | முதல் | | | 1,24,500 |
| 2 | எடுப்புகள் | | 2,000 | |
| 3 | பெற்ற கடன் | | | 7,000 |
| 4 | விற்பனை | | | 53,400 |
| 5 | கொள்முதல் | | 40,000 | |
| 6 | வங்கி மேல்வரைப்பற்று | | | 5,800 |
| 7 | மகிழ்வுந்து | | 20,000 | |
| 8 | பொதுச் செலவுகள் | | 2,500 | |
| 9 | கட்டடம் | | 1,10,000 | |
| 10 | சரக்கிருப்பு | | 16,200 | |
| | மொத்தம் | | 1,90,700 | 1,90,700 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

44. (அ)

## குறிப்பேட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப.எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| 2022 ஜூன் 1 | ரொக்க க/கு ப<br>முதல் க/கு<br>( ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது ) | | 1,10,000 | 1,10,000 |
| 10 | ரொக்க க / கு ப<br>முதல் க/கு<br>( கூடுதல் முதல் இட்டது ) | | 50,000 | 50,000 |
| 28 | எடுப்புகள் க/கு ப<br>ரொக்க க/கு<br>( சொந்த செலவிற்கு ரொக்கம் எடுத்தது ) | | 20,000 | 20,000 |

## பேரேட்டுக் கணக்குகள்

ப **ரொக்க கணக்கு** வ

| நாள் | விவரம் | கு. ப.எ | தொகை ₹. | நாள் | விவரம் | கு.ப. எ | தொகை ₹. |
|---|---|---|---|---|---|---|---|
| 2022 ஜூன் 1 | முதல் க/கு | | 1,10,000 | 2022ஜூன்28 | எடுப்புகள் க/கு | | 20,000 |
| 10 | முதல் க/கு | | 50,000 | 30 | இருப்பு கீ/ இ | | 1,40,000 |
| | | | 1,60,000 | | | | 1,60,000 |
| ஜூலை 1 | இருப்புகீ/கொ | | 1,40,000 | | | | |

( அல்லது )

(ஆ)

## சரிகட்டுப் பதிவுகள்

| நாள் | விவரம் | பே.ப. எ | பற்று ₹. | வரவு ₹. |
|---|---|---|---|---|
| அ) | இறுதிச் சரக்கிருப்பு க/கு ப<br>வியாபார க/கு<br>( இறுதிச் சரக்கிருப்பு பதியப்பட்டது ) | | 5,000 | 5,000 |
| ஆ) | சம்பளம் க / கு ப<br>கொடுபடவேண்டிய சம்பள க /கு<br>( கொடுபடவேண்டிய சம்பளம் ) | | 150 | 150 |
| இ) | முன்கூட்டி செலுத்திய காப்பீடு க/கு ப<br>காப்பீடு க/கு<br>( முன்கூட்டி செலுத்திய காப்பீடு ) | | 450 | 450 |
| ஈ) | பெற்ற கழிவு க/கு ப<br>முன்கூட்டிப் பெற்ற கழிவு க/கு | | 20,000 | |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

| | | | | |
|---|---|---|---|---|
| | ( முன்கூட்டிப் பெற்ற கழிவு ) | | | 20,000 |
| உ) | கூடியுள்ள வட்டி க/கு ப<br>முதலீடு மீதான வட்டி க/கு<br>( முதலீடுகள் மீது கூடியுள்ள வட்டி ) | | 1,000 | 1,000 |

45. (அ)

நிலைச்சொத்தின் மதிப்பு = ₹. 10,000 + ₹. 2,000 + ₹. 7,000 + ₹. 1,000 = ₹. 20,000

## தேய்மானத் தொகை காணல்

| விவரம் | தொகை ₹. |
|---|---|
| நிலைச்சொத்தின் மதிப்பு | 20,000 |
| **கழிக்க** : முதல் ஆண்டு தேய்மானம் ( 20,000 x 10/100 ) | 2,000 |
| | 18,000 |
| **கழிக்க** : இரண்டாம் ஆண்டு தேய்மானம் ( 18,000 x 10/100 ) | 1,800 |
| | 16,200 |
| **கழிக்க** : மூன்றாம் ஆண்டு தேய்மானம் ( 16,200 x 10/100 ) | 1,620 |
| சொத்தின் ஏட்டு மதிப்பு | 14,580 |

∴ முதல் ஆண்டு தேய்மானம் ₹. 2,000
இரண்டாம் ஆண்டு தேய்மானம் ₹. 1,800
மூன்றாம் ஆண்டு தேய்மானம் ₹. 1,620

( அல்லது )

(ஆ)

| நடவடிக்கை | வகைகள் |
|---|---|
| (i) தணிக்கைக் கட்டணம் செலுத்தியது ₹. 10,000. | வருவாயினச் செலவு |
| (ii) தொழிலாளர் நலனுக்காகச் செய்த செலவு ₹. 5,000. | வருவாயினச் செலவு |
| (iii) நிறுவன வாகனத்தின் மீதான பராமரிப்புச் செலவு ₹. 2,000. | வருவாயினச் செலவு |
| (iv) பழைய இயந்திரம் வாங்கி பழுதுபார்த்தச் செலவு ₹. 3,000. | முதலினச் செலவு |
| (v) ஆலை வாடகைச் செலுத்தியது ₹. 12,000 | வருவாயினச் செலவு |

46. (அ) **சந்தோஷ் ஆடையகத்தின் கொள்முதல் ஏடு**

| நாள் | விவரம் | உள்வரு இடாப்பு எண் | பே. ப.எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப் 1 | **பிரசாத்** | | | | |
| | 100 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹. 450 வீதம் ( 100 × ₹. 450 ) | | | 45,000 | |
| | 75 மீட்டர் வெல்வெட் துணி ஒரு மீட்டர் ₹.180 வீதம் ( 75 × ₹. 180 ) | | | 13,500 | 58,500 |
| 20 | **ஹரிராம்** | | | | |
| | 50 கட்டுகள் காடாத் துணி, கட்டு ஒன்று ₹. 730 வீதம் ( 50 × ₹. 730 ) | | | 36,500 | |
| | 80 கட்டுகள் காலிக்கோ துணி, கட்டு ஒன்று ₹. 650 வீதம்( 80 × ₹. 650 | | | 52,000 | 88,500 |
| | கொள்முதல் க/கு ப | | | | 1,47,000 |

குறிப்பு : ஏப்ரல் 24 ஆம் தேதி நடவடிக்கை, ரொக்க நடவடிக்கை ஆதலால், இதில் பதியப்படவில்லை

**சந்தோஷ் ஆடையகத்தின் விற்பனை ஏடு**

| நாள் | விவரம் | வெளிச் செல் இடாப்பு எண் | பே. ப.எ | தொகை விளக்கம் ₹. | தொகை மொத்தம் ₹. |
|---|---|---|---|---|---|
| 2017 ஏப் | **இரத்தினம்** | | | | |
| 10 | 60 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹.490 வீதம் ( 60 × ₹. 490 ) | | | 29,400 | 39,900 |
| | 50 மீட்டர் வெல்வெட் துணி, ஒரு மீட்டர் ₹. 210 விதம் ( 50 × ₹. 210 ) | | | 10,500 | |
| | **நாதன் நிறுவனம்** | | | | |
| 18 | 100 மீட்டர் சில்க் துணி, ஒரு மீட்டர் ₹. 510 வீதம் ( 100 × ₹. 510 ) | | | | 51,000 |
| | விற்பனை க/கு வ | | | | 90,900 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

( அல்லது )

ஆ) **கணக்கியல் சமன்பாடு**

| வ எண் | நடவடிக்கைகள் | சொத்துக்கள் | | | = | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரொக்கம் ₹. | சரக்கிருப்பு ₹. | வங்கி | = | முதல் ₹. | கடனீந்தோர் ₹. |
| அ | ரொக்கத்துடன் தொழில் தொடங்கியது | + 80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| | சமன்பாடு | +80,000 | 0 | 0 | = | + 80,000 | 0 |
| ஆ | ரொக்க கொள்முதல் | -30,000 | + 30,000 | 0 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +50,000 | + 30,000 | 0 | = | + 80,000 | 0 |
| இ | சம்பளம் ரொக்கமாக வழங்கியது | - 5,000 | 0 | 0 | = | - 5,000 | 0 |
| | சமன்பாடு | +45,000 | + 30,000 | | = | + 75,000 | 0 |
| ஈ | பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்ட தொகை | 0 | + 5,000 | - 5,000 | = | 0 | 0 |
| | சமன்பாடு | +45,000 | + 35,000 | - 5,000 | = | + 75,000 | 0 |
| உ | கூடுதல் முதல் இட்டது | + 10,000 | 0 | | = | + 10,000 | 0 |
| | சமன்பாடு | +55,000 | + 35,000 | - 5,000 | = | + 85,000 | 0 |
| | சமன்பாடு | +85,000 | | | = | + 85,000 | |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

47. (அ)

## கல்யாண சுந்தரம் என்பவரின் ஏடுகளில்
## முப்பத்தி ரொக்க ஏடு

| நாள் | பெறுதல்கள் | இ. எ | பே ப எ | தொகை ₹ | | | நாள் | செலுத்தல்கள் | சா சீ. எ | பே ப எ | தொகை ₹ | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | தள்ளுபடி | ரொக்கம் | வங்கி | | | | | தள்ளுபடி | ரொக்கம் | வங்கி |
| 2017 ஜன 1 | இருப்பு கீ/கொ | | | | 42,500 | 35,000 | 2017 ஜன 4 | வங்கி க/கு | | எ | | 11,500 | |
| 3 | விற்பனை க/கு | | | | 15,700 | | 6 | கொள்முதல் க/கு | | | | 14,300 | |
| 4 | ரொக்க க/கு | | எ | | | 11,500 | 10 | பொங்கல் முன்பணம் க/கு | | | | | 17,000 |
| 9 | பங்காதாயம் பெற்றது | | | | | 2,000 | 17 | மகேஷ் க/கு | | | 300 | 19,700 | |
| 12 | நாகராஜன் க/கு | | | 150 | 11,850 | | 20 | எடுப்புகள் க/கு | | | | 20,000 | |
| 30 | வங்கி க/கு | | எ | | 1,500 | | 30 | ரொக்க க/கு | | எ | | | 1,500 |
| | | | | | | | 31 | இருப்பு கீ/இ | | | | 6,050 | 30,000 |
| | | | | 150 | 71,550 | 48,500 | | | | | 300 | 71,550 | 48,500 |
| பிப் 1 | இருப்பு கீ/கொ | | | | 6,050 | 30,000 | | | | | | | |

( அல்லது )

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613

(ஆ)

**அர்ச்சனாவின் ஏடுகளில் 31 டிசம்பர் 2016 ஆம் ஆண்டிற்கான**

ப **வியாபார கணக்கு** வ

| விவரம் | தொகை ₹. | தொகை ₹. | விவரம் | தொகை ₹. | தொகை ₹. |
|---|---|---|---|---|---|
| தொடகச் சரக்கிருப்பு | | 80,000 | விற்பனை | 14,40,000 | |
| கொள்முதல் | 8,60,000 | | கழிக்க : விற்பனை திருப்பம் | 3,16,000 | 11,24,000 |
| கழிக்க : கொள்முதல் திருப்பம் | 10,000 | 8,50,000 | | | |
| | | | இறுதிச் சரக்கிருப்பு | | 1,00,000 |
| உள் ஏற்றிச்செல் செலவு | 52,000 | | | | |
| கழிக்க : முன் கூட்டி செலுத்தியது | 5,000 | 47,000 | | | |
| கூலி | 24,000 | | | | |
| கூட்டுக :கொடுபட வேண்டிய கூலி | 12,000 | 36,000 | | | |
| கொள்மீதான இறக்குமதி வரி | | 30,000 | | | |
| மொத்த இலாபம் கீ/இ | | 1,81,000 | | | |
| | | 12,24,000 | | | 12,24,000 |

B.BALAJI, GHSS, PARANTHUR, KANCHIPURAM DT. 9629647613